**திஸ்ஸமஹாராம பிரதேச சபை - 2020**

---

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

பெலிஅத்த பிரதேச சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயற்பாட்டுக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகார சட்டத்தின் உப பிரிவு 172(1) மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, பெலிஅத்த பிரதேச சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு கோட்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

---

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பிரதேச சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய

முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கு அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் பிரதேச சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(i)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(i)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ளன.

## 1.6 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் போது 03 கட்டிடங்களின் பெறுமதியை பெறுமதி மதிப்பீடு செய்யப்படாம் ரூபா 316,000,000 தொகை என நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன. | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | சொத்துக்களை சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | ஒரு வருடம் அல்லது அதற்கு குறைவான காலத்தினுள் செலுத்த வேண்டிய பொறுப்புக்கள் நடைமுறை பொறுப்புக்களின் கீழ் காட்டப்பட வேண்டியிருந்த போதிலும் அடுத்த வருடம் உள்நாட்டுக் கடன் அபிவிருத்தி நிதியத்திற்கு செலுத்த வேண்டிய கூட்டுப் பெறுமதி ரூபா 5,660,286 இற்கான கடன்தவணையை நடைமுறை பொறுப்புக்கள் என நிதி நிலைமை கூற்றில் காட்டப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | பொறுப்புக்களை சரியாக இனங்கண்டு நிதி நிலைமைக் கூற்றில் காட்டப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | மீளாய்வாண்டின் போது ரூபா 2,819,223 தொகைக்கான மூலதனச் செலவுகள் மீண்டுவரும் செலவுகள் என கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | மூலதனச் செலவுகள் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஈ) | 2019 ஆண்டிற்கான ரூபா 241,349 இற்கான செலவுகள் கடன்கொடுத்தோருக்கு வரவு வைக்காமல் மீளாய்வாண்டின் செலவுகள் என கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | - மேற்படி - | செலவுகள் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (உ) | மீளாய்வாண்டின் ஆரம்ப கடன்கொடுத்தோர் மீதி ரூபா 101,958 தொகை மிகையாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | - மேற்படி - | கடன்கொடுத்தோர் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஊ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 135,200 தொகைக்கான எரிபொருள் இருப்பு நடைமுறை சொத்து ஒன்று என கணக்கீடு செய்திருக்கவில்லை. | - மேற்படி - | சொத்துக்கள் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

### 1.6.2 தொங்கல் கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2017 ஆம் ஆண்ட முதல் முன்கொண்டு வந்து இருக்கும் ரூபா 108,902 இற்கான தொங்கல் கணக்கு மீதியை இந்த ஆண்டிலும் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்காமல் திறந்த நிதியத்திற்கு சீராக்கல் செய்யப்பட்டுள்ளது. | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | தொங்கல் கணக்கின் மீதியை இனங்கண்டு விரைவாக தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.6.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கூட்டுத்தொகை ரூபா 355,615 தொகைக்கான 03 கணக்கு விடயங்கள் தொடர்பாக கணக்காய்விற்குத் தேவையான தகவல்கள் சமர்ப்பித்திருக்கவில்லை. | எதிர்காலத்தில் அட்டவணைகள் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். | நிதிக்கூற்றுக்களில் காணப்படும் கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றுகள் சமர்ப்பிக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் படி மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் வருமானத்தை மிகைத்த செலவு ரூபா 12,626,145 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேர்மாறாக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 9,710,039 தொகையாக இருந்தது.

## 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| **(அ)** | **வீதவரியும் வரியும்** | | |
| i. | பெற வேண்டிய ரூபா 3,133,085 இற்கான வீதவரியை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | மீதியான நிலுவைத் தொகையை விரைவாக அறவீடு செய்ய நடவடிக்கை எடுப்பேன். | நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும். |
| ii. | பெற வேண்டிய ரூபா 320,400 இற்கான வியாபார வரியை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ரூபா 16,200 இற்கான வியாபார நிறுவனங்கள் மூடப்பட்டுள்ளது எனவும் மீதியான நிலுவைத் தொகையை விரைவாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | - மேற்படி - |
| iii. | பெற வேண்டிய களியாட்ட வரி ரூபா 295,940 தொகையினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பெற வேண்டிய களியாட்ட வரியை அறவீடு செய்வதற்காக உரிய நிறுவனங்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. | - மேற்படி - |
| **(ஆ)** | **வாடகை** | | |
| i. | பெற வேண்டிய கடை வாடகை ரூபா 2,602,345 தொகையினை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | மீதி நிலுவை வாடகையை செலுத்தும் படி கடை உரிமையாளர்களுக்கு அறிவிக்கப்பட்டது எனவும் மற்றும் செலுத்தாவிடின் சட்டத்தின் படி தொடர் நடவடிக்கை எடுப்பேன். | நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்யப்படும். |
| ii. | சந்தையை குத்தகைக்கு விடுவதன் மூலம் பெற வேண்டிய ரூபா 243,333 தொகையினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கொரோனா தொற்றுநோய் நிலைமை காரணமாக அறவீடு செய்ய முடியாமல் போன சந்தை குத்தகை வருமானத்தை பதிவழிப்பதற்காக ஆளுனரின் அங்கீகாரத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது எனவும் மற்றும் நிலுவை காணப்படும் வாடகையாளர்களின் பாதுகாப்பு வைப்பினை தடுத்து வைத்துள்ளேன். | - மேற்படி - |
| iii. | பெற வேண்டிய ஏனைய வாடகை வருமானங்கள் ரூபா 172,702 தொகையை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ரூபா 90,793 தொகையினை பதிவழிப்பதற்காக ஆளுனரின் அங்கீகாரத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது எனவும் மீதியான நிலுவை வாடகை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | - மேற்படி - |

**(இ) அனுமதிப் பத்திரக் கட்டணம்**

| | | | |
|---|---|---|---|
| i. | பெற வேண்டிய ரூபா 102,250 இற்கான வியாபார அனுமதிப் பத்திரக் கட்டணத்தை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | மீதி நிலுவைத் தொகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | - மேற்படி - |
| ii. | பெற வேண்டிய ரூபா 101,700 இற்கான அறிவித்தல் பலகைக் கட்டணம் மற்றும் ரூபா 701,067 இற்கான ஏனைய அனுமதிப் பத்திரக் கட்டணங்களை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலுவை அறிவித்தல் பலகைக் கட்டணத்தை அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்கின்றேன் எனவும் நிலுவை ஏனைய அனுமதிப் பத்திரக் கட்டணங்களை பதிவழிப்பதற்காக ஆளுனரின் அங்கீகாரத்துக்கு சமர்ப்பித்துள்ளேன். | - மேற்படி - |

**(ஈ) நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

| | | |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் பெற வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 21,366,361 தொகை ஆகும். | மீதி நிலுவைத் தொகையை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

பிரதேச சபைச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பகிரங்க பொது வழிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல் பொது மக்களின் சுகபோகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

### 3.1 முகாமைத்துவத் திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2009 ஏப்ரல் 17 திகதிய 1597/8 இலக்கங் கொண்ட அதி விஷேட வர்த்தமானியின் மூலம் திருத்தப்பட்டிருந்த அந்த வர்த்தமானியின் V ஆவது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு இணக்கச் சான்றிதழ் இன்றி வதிதல்/ பாவணை செய்தல் அல்லது பயன்படுத்துதலுக்காக ஒரு நாளைக்கு ரூபா 50 வீதமாகிய ரூபா 806,090 இற்கான தண்டப் பணம் ஒன்று கட்டிட அபிவிருத்தி வரைபுகள் 11 இல் இருந்து அறவீடு செய்திருக்கவில்லை. | கணக்காய்வில் சுட்டிக் காட்டியவாறு எதிர்காலத்தில் தாமதம் அடையும் கட்டிட அபிவிருத்தி வரைபுகளுக்காக ஒரு நாளைக்கு ரூபா 50 வீதம் தண்டப் பணம் ஒன்று அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | சட்டம் மற்றும் வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | சபைக்குச் சொந்தமான 02 உத்தியோகபூர்வ வாசஸ்தலங்களில் இருந்து மாதாந்த சிக்கன வாடகை 2014 ஜனவரி 01 திகதிய பெறுமதி மதிப்பீட்டின் படி ரூபா 1,800 தொகை எனினும் அந்தப் பெறுமதி மதிப்பீட்டின் காலம் 06 வருடங்களை மிகைத்திருந்த போதிலும் பெறுமதி மதிப்பீட்டை புதுப்படுத்துவதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | உத்தியோகபூர்வ வாசஸ்தங்களுக்காக புதிய பெறுமதி மதிப்பீடு ஒன்று பெற்றுக் கொள்வதற்கு விண்ணப்பித்துள்ளேன். | புதிய பெறுமதி மதிப்பீட்டின் படி வாடகை அறவீடு செய்யப்பட வேண்டும். |
| (இ) | பன்னேகமுவ ஆலோக மாவத்த ஆரம்பத்தில் இருந்து திரு. ஜயவர்தன அவர்களின் வீடு வரையான பாதையில் பரப்பியிருந்த சீமெந்துத் துண்டுக் கற்களின் தரம் பரிசோதனையின் படி பாதையில் பரப்பியிருந்த துண்டுக் கற்களில் 61 சதவீதம் குறிப்பிட்ட வலு இன்றி காணப்பட்டமையால் மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 1,731,840 தொகைக்கான செலவு பயனற்ற கொடுப்பனவொன்றாக காணப்பட்டது. | 18 துண்டுக் கற்கள் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் உத்தியோகத்தர்களினால் எடுத்துச் செல்லப்பட்டு தரப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது எனவும் மற்றும் அந்த அறிக்கையில் பரப்பப்பட்டிருந்த துண்டுக் கற்கள் உரிய வலுவுடன் காணப்படுகின்றது என குறிப்பிடப்பட்டமையால் கொடுப்பனவு மேற்கொண்டேன். | மதிப்பிடப்பட்ட நியமத்திற்குரிய துண்டுக் கற்கள் பரப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |